भारतीय गैर न्यायिक

भारत

पचास रुपये रु.50

FIFTY RUPEES Rs.50

सत्यमेव जयते

INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU

BF 978794

J. ரமேஷ் ஆபிரகாம் (S.V.)
LIC No. 39/1997, தூத்துக்குடி

T. IRWIN VICTORIA
Thoothukudi

நாள் 21 FEB 2022

# ஆகம் கலையகம் மற்றும் தூய மரியன்னை கல்லூரிக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்

**ஆகம் கலையகம், தூத்துக்குடி மாவட்டம், 628001** சார்பாக திட்ட ஒருங்கிணைப்பாளர், ஆகம் கலையகம், முதலாம் நபராகவும்

**தூய மரியன்னை கல்லூரி,(தன்னாட்சி) தூத்துக்குடி மாவட்டம், 628001** சார்பாக கல்லூரி முதல்வர் இரண்டாம் நபராகவும்

கொண்டு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது

லூசியா ரோஸ்
முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி - 628 001

ஆகம் கலையகம், தூத்துக்குடி **(முதலாம் நபர்)**, இசை மற்றும் நாடகத்தமிழில் தொடர் பயிற்சிகளை மேற்கொண்டு பல நிகழ்ச்சிகளை மேடையேற்றி தொடர்ந்து களத்தில் இயங்கி வரும் கலையகம் ஆகும். 2018 ல் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் இசை மற்றும் நாடகத்தமிழ் துறையில் தொடர்ந்து பல்வேறு பயிற்சிகளையும், நிகழ்ச்சிகளையும், அந்தந்த துறையில் பல ஆண்டுகளாக சிறந்து விளங்கும், பல ஆண்டு கால அனுபவம் வாய்ந்த கலைஞர்களைக் கொண்டு தொடர்ந்து நடத்தி வருகிறது.

தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி (இரண்டாம் நபர்), உயர் கல்வி மூலம் இளம் பெண்களை சமத்துவ சமுதாயத்தின் முகவர்களாக மாற்றுவது எனும் உயரிய நோக்கில் 1948 ஆம் ஆண்டில் இக்கல்லூரி நிறுவப்பட்டதில் இருந்து, தூத்துக்குடி மாவட்டத்தின் இளம்பெண்களுக்கு அறியாமை இருளகற்றும் அரும்பெரும் கல்வி அறிவை வழங்குவதில் பெருந்தொண்டு ஆற்றி வருகிறது. இப்படிப்பட்ட ஒரு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட கல்லூரியின் சிறப்பு வாய்ந்த துறையாக தமிழ்த் துறை, பகுதி I மொழிப் படிப்பாக தமிழை வழங்கி வருகிறது.1985- 1989 ஆண்டுகளில் இளங்கலை படிப்பை வழங்கிய இத்துறையில், தற்போது முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மொழிப் படிப்பில் சுமார் 980 மாணவர்கள் தமிழ் படித்து வருகின்றனர். இத்துறை மாணவர்களின் படைப்புத்திறன்களை ஊக்குவித்து அவர்களின் படைப்புகளை வெளியிட உதவுகிறது.

லூசியா ரோஸ்

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி - 628 001

**மேற்கண்ட முதலாம் நபருக்கும்,இரண்டாம் நபருக்கும் இடையே நிகழ இருக்கும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்**

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாக இரண்டு நபர்களும் உத்தேசித்துள்ளவை பின்வருமாறு :

(அ) பயிற்சிகள், கருத்தரங்குகள், முத்தமிழ் விழாக்கள், கௌரவ விரிவுரைகள் மற்றும் தமிழ் விழாக்களை இணைந்து நடத்துவதற்கு ஒன்றாக வேலை செய்வது .

(ஆ) இரண்டு நபர்களும் ஒருவருக்கொருவர் நல்ல ஒத்துழைப்புடன் செயல்பட்டு அவரவர் மேம்பாட்டிற்கு தகுந்த ஆதரவின் மூலம் பணிபுரிவது

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி ( தன்னாட்சி )
தூத்துக்குடி - 628 001

**மேற்கண்ட முதலாம் நபருக்கும் இரண்டாம் நபருக்கும் இடையே நிகழவிருக்கும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம்**

(அ) இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முன்னேற்றத்தை மேற்பார்வையிடும் பொருட்டு, இரு தரப்பிலும் கையொப்பமிட்டவர்கள் / பரிந்துரைக்கப்பட்டவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக உறுப்பினர்களுக்கு இடையே, ஆக்கபூர்வமான திட்டமிடல் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை வரையறுப்பது ,

(ஆ) அவ்வப்போது மதிப்பாய்வுகள் மற்றும் விவாதங்களை இரு கட்சிகளின் கையொப்பமிட்டவர்கள் / பரிந்துரைக்கப்பட்டவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக உறுப்பினர்களுக்கு இடையே நடத்தி அதன் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வளர்நிலைகளை மதிப்பிடுவது எவ்வாறு என தீர்மானிப்பது

(இ) இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிகள், கட்சிகள் ஒன்றிணைந்து செயல்படும் விதம் மற்றும் அளவை விவரிப்பது.

(ஈ) நிதி சார்ந்த தேவைகளை எவ்வாறு மேலாண்மை செய்தல் என வரையறுப்பது

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி - 628 001

**ஆகம் கலையகம் மற்றும் தூய மரியன்னை கல்லூரிக்கு (தன்னாட்சி) இடையே ஏற்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் ஆகம் கலையகத்தின் பங்களிப்பு**

1. நிகழ்ச்சி வடிவமைப்பு
2. பயிற்சிகள்
   (அ ) குறுகிய கால பயிற்சி
   (ஆ )நீண்ட கால பயிற்சி
3. சான்றிதழ் மற்றும் பட்டய படிப்பு வகுப்புகள்
4. கௌரவ விரிவுரைகள்

**1.நிகழ்ச்சி வடிவமைப்பு**

தூய மரியன்னை கல்லூரி தமிழ்த்துறை சார்பாக நடத்தப்படும்

- **நாடக விழா,**
- **முத்தமிழ் விழா,**
- **தமிழ்ப்பாரம்பரிய நடனக்கண்காட்சி,**
- **தமிழ்ப்பாரம்பரிய இசைக்கருவிகள் கண்காட்சி மற்றும்**
- **தமிழ் நாட்டுப்புற இசைக்கச்சேரி**

போன்ற கலை ரீதியான படைப்பாக்கத்தை தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி) மாணவிகளைக் கொண்டே அரங்கேற்றம் செய்ய, ஆகம் கலையகம் சார்பாக ஆசான்கள் அறிமுகம் செய்யப்பட்டு அவர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும். இம்மாதிரியான நிகழ்வுகளில்

- நடன இயக்கம்,
- நாடகங்களுக்கான கதை உருவாக்கம்,
- இசையமைப்பு
- ஆடை வடிவமைப்பு
- மேடை வடிவமைப்பு

போன்ற படைப்பு சார்ந்த பணிகள் செய்து தரப்படும்.

லூசியா ரோஸ்

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி ( தன்னாட்சி )
தூத்துக்குடி - 628 001

**2.பயிற்சிகள்**

ஆகம் கலையகத்தால் பயிற்சி அளிக்கப்படும் முன்தரப்பட்டுள்ள

- பல வகை தமிழ் நாட்டுப்புற நடனங்கள்
- தமிழ் கூத்து வகைகள்
- தமிழ் தற்காப்பு வகைகள்
- தமிழ் இசை கருவிகள் மீட்டுதல்

ஆகியவற்றுள் தூய மரியன்னை கல்லூரியின் விருப்பத்திற்கு இணங்க தேவைப்படும் கலைகள் **குறுகிய கால பயிற்சியாகவோ** (இரண்டு அல்லது மூன்று நாள் பயிற்சி) அல்லது **நீண்ட கால தொடர் பயிற்சியாகவோ** (வாரம் இருமுறை பருவம் முழுவதும்) கற்றுத்தரப்படும்.

**3.சான்றிதழ் மற்றும் பட்டய படிப்பு வகுப்புகள்**

தமிழ்த்துறையில் மிகவும் முக்கியமான பிரிவுகளாக இருக்கும்

- நாடகவியல்,
- நாட்டார் வழக்காற்றியல்,
- தமிழர் கலைகள் பயிற்சி
- தமிழர் கலைகள் ஆசான் பயிற்சி

ஆகிய தலைப்புகளில் சான்றிதழ் படிப்பை அல்லது பட்டயப்படிப்பை தொடங்க உதவி செய்து, அந்த பாடங்களுக்கு ஆசிரியர்கள் ஏற்பாடு செய்தல், தங்கு தடையின்றி அந்த வகுப்புகளை சிறப்பாக நடத்துதல் போன்றவற்றிற்கு ஆகம் கலையகம் உதவிகரமாக இருக்கும். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் நாடகவியல், நாட்டார் வழக்காற்றியல், தமிழர் கலைகள் ஆகிய பாடங்கள் பாடத்திட்டத்தில், துணைப்பாடமாகவும் (Allied subject), திறன் அடிப்படை பாடமாகவும் (skill based core subject ), முக்கிய விருப்பத்தேர்வு பாடமாகவும் (major elective subject ) தரப்பட்டுள்ளது. இந்த பாடங்களை நாம் சான்றிதழ் படிப்பிற்கோ, ஓர் பட்டயப்படிப்பிற்கோ அல்லது நமது கல்லூரியிலேயே பிற துறை மாணவர்களுக்கு தமிழ்த்துறை சார்பாக திறன் அடிப்படை பாடமாகவும் (skill based core subject ) தேர்வு செய்யலாம்.

லூசியா ரோஸ்

முதல்வர்

புனித மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)

தூத்துக்குடி - 628 001

## 4. கௌரவ விரிவுரையாளர்கள்

தூய மரியன்னை கல்லூரியில் உள்ள தமிழ்த்துறை மாணவிகளுக்கு பாடத்திட்டத்தில் நாட்டார் வழக்காற்றியல், நாடகவியல், நாட்டுப்புறஇசை, நாட்டுப்புறப்பாடல்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், போன்ற பிரிவுகளின் கீழ் கல்லூரியின் விருப்பத்தின் பேரில் கௌரவ விரிவுரையாளர்களாக கலை ஆசான்களும் கலைஞர்களும் ஆகம் சார்பாக ஏற்பாடு செய்து தரப்படுவார்கள்.

லூசியா ரோஸ்

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி - 628 001

**முதலாம் நபர் சார்பாக பரிந்துரைக்கப்படும் ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர்.தி . இர்வின் விக்டோரியா**

**இரண்டாம் நபர் சார்பாக பரிந்துரைக்கப்படும் ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர் .அ .ம .சோனல்,**
**உதவி பேராசிரியர் , தமிழ்த்துறை**

மேற்கொண்ட நபர்கள் முதலாம் மற்றும் இரண்டாம் நபர்களுக்கு இடையே ஒருங்கிணைப்பாளர்களாக செயல்படுவார்கள்

**முதலாம் நபரால் நிர்வாக செயல்பாடுகளுக்காக பரிந்துரைக்கப்படும் நபர்கள்**

முனைவர். தி. இர்வின் விக்டோரியா
முனைவர்.சி.ஜாக்சன்
முனைவர். வ. ர. யாசு பாரதி
திரு. ரா.கார்த்திக்
திரு. அ.அருள் ஜேசுராஜ்
திரு. ப.சுப்புராஜ்
திரு .அ. கிங்ஸ்டன்

**இரண்டாம் நபரால் நிர்வாக செயல்பாடுகளுக்காக பரிந்துரைக்கப்படும் நபர்கள்**

முனைவர் .ந .சண்முகவடிவு (எ) சாந்தி
முனைவர் .அ . அமல அருள் அரசி
முனைவர் அருட்சகோதரி .ஆ. மரிய சாந்தி
முனைவர்.ச.அருள் ஜோஸ்பின்
முனைவர் .அ .ம .சோனல்
முனைவர் அருட்சகோதரி மி.சு .எழிலரசி

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி ( தன்னாட்சி )
தூத்துக்குடி - 628 001

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்களோ, மாற்றங்களோ எதிர் காலத்தில் செய்ய விரும்பினாலோ அல்லது ஒருங்கிணைப்பாளரை மாற்ற விரும்பினாலோ அதில் மாற்றங்களை கொண்டு வர முதலாம் மற்றும் இரண்டாம் நபர்கள் நிர்வாக செயல்பாடுகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் கலந்து பேசி மாற்றங்கள் கொண்டு வரலாம்.

முதலாம் மற்றும் இரண்டாம் நபர்கள் சார்பாக பரிந்துரைக்கப்படும் ஒருங்கிணைப்பாளருடன் தொடர்பு கொள்ள முடியாத பட்சத்தில் அல்லது ஒருங்கிணைப்பாளர்கள் அனுமதியின் பேரில் நிர்வாக செயல்பாடுகளுக்காக பரிந்துரைக்கப்படும் நபர்கள் முதலாம் மற்றும் இரண்டாம் நபர்கள் சார்பாக ஒருவர் மற்றவருடன் பேசி முக்கிய முடிவுகளை எடுத்து கொள்ளலாம்.

**நிதி சார் ஒப்பந்தம்**

- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விளைவாக முதலாம் நபர் (ஆகம்) இரண்டாம் நபருக்கு (தூய மரியன்னை கல்லூரி ) இலாப நோக்கமில்லாத சேவையை வழங்கும். அதாவது ஆகம் என்ற நிறுவனம் (முதலாம் நபர்) தன் ஆக்க செலவுகளை தவிர்த்து இலாபம் என்கிற முறையில் பிறரிடம் வசூலிக்கும் கட்டணங்களை இரண்டாம் நபரிடம் வசூலிக்காது.
- இந்த இலாபம் தவிர்த்து முதலாம் நபர் (ஆகம்) வழங்கும் சேவைகளுக்கு ஆகும் செலவுகளை, உதாரணமாக பயிற்சியாளர் ஊதியம், பயணப்படி , பயிற்சிப்பொருட்கள் வாடகை ஆகியவற்றிற்கான கட்டணங்களை இரண்டாம் நபரே தர வேண்டும்
- ஒப்பந்தம் சார்ந்து நிகழ்த்தப்படும் அனைத்து நிகழ்வுகளுக்கான பொருட்செலவும் இரண்டாம் நபரை சார்ந்ததே.

லூசியா ரோஸ்

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி ( தன்னாட்சி )
தூத்துக்குடி - 628 001

## இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிமுறைகள்

(அ) இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்பினரும் கையெழுத்திட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். இரு தரப்பினரின் எழுத்துப்பூர்வ பரஸ்பர ஒப்புதலின் மூலம் மாற்றியமைக்கப்படலாம் என்ற புரிதலுடன் இது **மூன்று ஆண்டுகளுக்கு (2022-2024)** செல்லுபடியாகும்.

(ஆ) எந்தவொரு தரப்பினரும் இந்த ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கான அறிவிப்பின் பேரில் ஒரு மாதத்திற்கு முன்கூட்டியே எழுத்துப்பூர்வ அறிவிப்புடன் முறித்துக் கொள்ளலாம்.

(இ) ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இரு தரப்பினரின் பரஸ்பர ஒப்புதலுடன் நீட்டிக்கப்படலாம் மற்றும் எழுத்துப்பூர்வமாக புதுப்பிக்கப்படலாம்.

(ஈ) இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், அனைத்து விஷயங்களின் இரகசியத்தன்மையை பேணுவதற்கு முதல் தரப்பும் இரண்டாம் தரப்பும் கொள்கையளவில் ஒப்புக்கொள்கின்றன.

(உ) இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிமுறைகள் தொடர்பான எந்தவொரு விஷயத்திலும் முதல் தரப்பினரும் இரண்டாம் தரப்பும் பரஸ்பர ஆலோசனைகளை நடத்துவார்கள் மற்றும் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நம்பிக்கையின் உணர்வோடு கூட்டாகச் செயல்படுவார்கள்.

லூசியா ரோஸ்

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி - 628 001

புரிந்துணர்வு ஒப்பந்தமாக (MoU) நிறைவேற்றப்பட்டது

**பிப்ரவரி 22,2022 அன்று இதில் முதல் தரப்பும் இரண்டாம் தரப்பும் கையெழுத்திட்டார்கள் என்பதற்கு சாட்சியாக**

திரு .இர்வின் விக்டோரியா
திட்ட இயக்குனர்/
முதன்மை செயல் அதிகாரி ,
ஆகம்

அலுவலக முத்திரை

AAGAM
TUTICORIN

அ .ச .ஜோ .லூசியா ரோஸ்
முதல்வர்,
தூய மரியன்னை கல்லூரி(தன்னாட்சி )
தூத்துக்குடி

அலுவலக முத்திரை

முதல்வர்
புனித மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி - 628 001

சாட்சிகள்

1.
நிர்வாக குழு உறுப்பினர் , ஆகம்

2.
நிர்வாக குழு உறுப்பினர், ஆகம்

சாட்சிகள்

1.முனைவர் .எல்.ஜாக்குலின் லியோ
பேராசிரியை, ஆங்கிலத்துறை
கலைப்புல இயக்குநர்

2.முனைவர்.ந.சண்முக வடிவு (அ) சாந்தி
தமிழ்த்துறைத்தலைவர்